Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

## C. C.No. 264/ 2015

DEPOSITION OF WITNESS : P.W. 3

| | | | |
|---|---|---|---|
| Name | : பாஸ்கரன் | Father's Name/ Husband Name | : நாகராஜ் |
| Village | கோரையூத்து | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.07.2023

(எதிரிகள் ஆஜர் )

முதல் விசாரணை

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . நான் விவசாயம் செய்து வருகிறேன் . அ.சா.1 யை எனக்கு தெரியும் . ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 8 வருடத்திற்கு முன்பு பால்கண்ணன் என்பவரின் தோட்டத்தில் நானும் , அழகு என்பவரும் டிராக்டரில் உழுவதற்கு சென்றோம். மதியம் 2.00 மணியளவில் பால் கண்ணனின் தோட்டத்திற்கு சின்னசாமி , காமாயி, பஞ்சு , தங்கப்பிள்ளை , வனிதா, மற்றும் பெயர் தெரியாத சிலர் வந்து பால் கண்ணனை சத்தம் போட்டு எங்கள் இடத்திற்கு ஏன் வந்து உழுகிறாய் என்று கூறி நாங்கள் உழுத டிராக்டரை தடுத்து நிறுத்தினார்கள் , எதிரிகள் பால்கண்ணனை பார்த்து கோத்தா , கொம்மா என்று அசிங்கமாக திட்டினார்கள். பால்கண்ணனை பார்த்து எதிரிகள் அனைவரும் என் இடத்திற்குள் வந்தால் வெட்டுவேன் , குத்துவேன் என்று மிரட்டிச் சென்றார்கள் . பால்கண்ணன் கண்டமனூர் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கச் சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2023.07.25 15:28:24 +0530

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**